IVDP
SINCE 1979

# ஐ.வி.டி.பி.
# மலர்

✢ டிசம்பர் 2017 – மார்ச் 2018
✢ மொட்டு 10 ✢ மலர் 30
✢ தனிச்சுற்றுக்கு மட்டும்

## மகளிர் சுய உதவிக்குழு புத்துணர்வு இதழ்

INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

2017-ல்
இயற்கை எய்திய மற்றும்
விபத்தில் நிரந்தர ஊனமுற்ற
**645**
ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு
உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு
**₹ 3.24 கோடி**
வாழ்க்கை
பாதுகாப்பு நிதி





# நிறுவனர் உள்ளத்திலிருந்து...

அன்பு உள்ளங்களே!

வணக்கம்,

இயற்கையோடு இணைந்து வாழ்வதே முழுமையான வாழ்வு. அதனால்தான் இயற்கையை இறைவனாக வழிபட்டனர் நம் முன்னோர். நம் வாழ்வும், வாழும் மண்ணும் ஒன்றோடு ஒன்று பிணைந்தவை. ஆனால் இன்று இவையனைத்திற்கும் பேராபத்து. இன்றைய வாழ்வின் ஒவ்வொரு நொடியும் வியாபாரமாகி போன நிலையில், வாழ்வளிக்கும் இயற்கையும் அதிலிருந்து தப்பவில்லை. மனிதன் என்று தடம் மாறினானோ அன்றே அவனின் வாழ்க்கை போராட்டமானது.

இந்நிலையில் தமிழகத்தின் அன்றாட நிகழ்வாகிபோனது இயற்கையை காக்கும் இந்த போராட்டங்கள். காவிரி மீட்பு, ஸ்டெர்லைட் ஆலை நஞ்சு, மீத்தேன் வாயு எடுத்தல், கனிம வளங்கள் கொள்ளையடிப்பு, நஞ்சான நிலங்கள், குடிக்க தகுதியற்ற நீர், மணற்கொள்ளை, நீர்வழித் தடங்கள், நீர் நிலைகள் அழிப்பு மற்றும் பாலைவனமாகி போன நிலங்கள் என வரிசைகட்டி தமிழகத்தை மிரட்டுகின்றன பல்வேறு இயற்கைக்கு எதிரான பிரச்சனைகள்.

ஆகவே ஐ.வி.டி.பி.-யின் உறுப்பினர்களாகிய நீங்கள் நாகரிகம் என்ற பெயரில் இயற்கைக்கு எதிரான எந்த செயல்களிலும் ஈடுபடாதீர்கள். இயற்கையை போற்றுங்கள், மதியுங்கள், நீங்கள் அவ்வாறு செய்யும் போது இயற்கை உங்களுக்கு உரிய கைமாறு அளிக்கும். நான் குறிப்பிட்ட இந்த முயற்சிகளை உங்கள் குடும்பங்களிலிருந்து துவங்குங்கள்.

இறுதியாக இன்னும் சில நாட்களில் உங்கள் குழந்தைகளின் தேர்வு முடிவுகள் வரவிருக்கின்றன. சிறந்த கல்வி நிறுவனங்களை தேர்வு செய்யுங்கள். உங்கள் அனைத்து குழந்தைகளையும் உயர் கல்விக்கு அனுப்புங்கள். எதிர்காலத்தில் நல்ல வேலைவாய்ப்பு வழங்க கூடிய அல்லது சுயதொழில் செய்யும் திறனை வளர்க்க கூடிய கல்வியை தேர்வு செய்து உங்கள் குழந்தைகளுக்கு வழங்குங்கள். அப்போதுதான் உங்கள் குழந்தைகள் பெற்ற கல்வி உங்கள் குடும்பத்திற்கு பயனளிக்கும்.

**அனைவருக்கும் என் இனிய தமிழ்புத்தாண்டு மற்றும் மே தின நல்வாழ்த்துகள்!**

இப்படிக்கு,

என்றும் மக்கள் பணியில்...

**குழந்தை பிரான்சிஸ்**

நிறுவனர் / தலைவர்



முதல் குழந்தை பெண்ணாக பிறந்தால்
இரண்டாவது குழந்தைக்கு இரண்டு அம்மாக்கள்.

IVDP



## 2017 ஆம் ஆண்டிற்கான இலாபப் பங்கீடு

# ₹ 56 கோடி

எந்த நிறுவனத்திலும் இல்லாத சிறப்பம்சமாக விளங்குவது ஐ.வி.டி.பி நிறுவனத்தின் இலாப பங்கீடு ஆகும். ஒவ்வொரு உறுப்பினரும் குறிப்பிட்ட தொகையினை தங்களின் சேமிப்பிற்கு தக்கவாறு குறைந்த வட்டியில் உள்கடனாக பெற்று பயனடைந்து வருகின்றனர். அந்த வட்டியானது குறிப்பிட்ட கால இடைவெளியில் உறுப்பினர்களின் சேமிப்பிற்கு தக்கவாறு இலாபமாக பங்கிடப்படுகிறது. இதுவே இலாபப் பங்கீடு ஆகும்.

இந்த இலாபப்பங்கீட்டு தொகையுடன் உறுப்பினர்கள் கட்டிய சேமிப்பிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகைக்குமேல் உள்ள சேமிப்பை உபரி சேமிப்பாக பிரித்து வழங்கப்படுகிறது.

இவ்வருடம் 3544 குழுக்களின் 65222 உறுப்பினர்கள் பெற்ற

**உபரி சேமிப்பு மற்றும் இலாபப் பங்கீடு**

| | |
|---|---|
| உபரி சேமிப்பு | ₹ 39 கோடி |
| இலாபப் பங்கீடு | ₹ 56 கோடி |
| மொத்தம் | ₹ 95 கோடி |

# ₹ 95 கோடி

இதுவரை உறுப்பினர்கள் பெற்ற மொத்த இலாபப் பங்கீடு

# ₹ 450 கோடி



## 2017ல் இயற்கை எய்திய 645 ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு

# ₹ 3.24 கோடி

## வாழ்க்கை பாதுகாப்பு நிதி

ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் புயல், பூகம்பம், நிலநடுக்கம், சுனாமி போன்ற பேரிடர் பணிகளில் தங்கள் பங்களிப்பை வழங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வருகின்றனர். அதே போல் ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்கள் யாராவது இறந்தால் குழு உறுப்பினர்கள் அனைவரும் இறந்த உறுப்பினரின் ஈமச்சடங்கிற்காக ரூ. 5,000 வழங்கி இறந்த உறுப்பினர்களுக்கு மரியாதை செய்கின்றனர்.

ஐ.வி.டி.பி-யில் உள்ள 2,19,168 சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் கூட்டுப் பொறுப்புணர்வை உணர்த்தும் விதமாக ஒவ்வொரு வருடமும் இறந்த உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு வாழ்க்கை பாதுகாப்பு நிதி உதவி வழங்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. **சாந்தி,** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். சேலம் பெரியார் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் அருட்தந்தை **விமல்** அவர்கள் ஊக்க உரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் 2017 ஆம் ஆண்டில் இயற்கை எய்திய 645 உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ. **50,000** மற்றும் விபத்தில் நிரந்தரமாக ஊனமுற்ற 4 உறுப்பினர்களுக்கு ரூ. **25,000** ஆக மொத்தம்

**₹ 3.24 கோடி**
**வாழ்க்கை பாதுகாப்பு நிதி**

வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் உறுப்பினர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் குழு ஊக்குனர்கள், ஐ.வி.டி.பி. பணியாளர்கள் என 2000 பேர் கலந்து கொண்டனர்.



அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது. அதிகம் செயல்படுபவனையே கைகூப்பி தொழுகிறது.

IVDP






இதுவரை ஈமச்சடங்கிற்காக

**₹ 1.72 கோடி**

வாழ்க்கை பாதுகாப்பு நிதி உதவியாக

**₹ 21.61 கோடி** என

இத்திட்டத்தின் மூலம் இயற்கை எய்திய 5262 உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு

**₹ 23.33 கோடி**

வழங்கப்பட்டுள்ளது.

## அன்பு தாய்க்கு

ஈரைந்து மாதம் சுமந்து ஈன்று எடுத்த அன்னையே
உன் ஊனை உறைவிடமாக்கினாய்
உதிரத்தை உணவாக்கினாய்
வாடகை இல்லா வீடு உன் கருவறை
பாலமுது ஊட்டி வளர்த்தாய் பசியாற
செந்தேன் தமிழ் கொடுத்தாய் செவிக்கு தாலாட்டாக,
யானை இருந்தாலும் பொன், இறந்தாலும் பொன்
ஐ.வி.டி.பி-யில் இருந்தால் கடன் உதவி,
இறந்தால் வாழ்க்கை பாதுகாப்பு நிதி உதவி.

R. கௌரி, மகராஜகடை,
கிருஷ்ணகிரி 2-CLF1 கிளை





IVDP

மன்னிக்கும் குணம்,
ஆற்றல் வாய்ந்தவர்களுக்கு ஓர் அடையாளம்.

# பெண் கல்வியை ஊக்குவிக்கும் ஐ.வி.டி.பி.
# அரசு மகளிர் கலைக் கல்லூரி
# மாணவிகள் நலனுக்காக ஐ.வி.டி.பி. வழங்கிய
# ₹ 5.53 இலட்சம்
## மதிப்பிலான உதவி



கிருஷ்ணகிரியில் இயங்கும் அரசு மகளிர் கலைக்கல்லூரி சுற்றியுள்ள கிராமங்களில் இருக்கும் ஏழை மாணவிகளுக்கு சிறந்த உயர்கல்வியை அளித்து வருகிறது. இந்த கல்லூரியின் தரத்தை உயர்த்த கடந்த ஆண்டுகளில் டெஸ்க், பெஞ்ச், நாற்காலிகள், மாணவிகளுக்கு அடிப்படை ஆங்கில பயிற்சி, ஆளுமைத்திறன் பயிற்சி, பருவத் தேர்வில் சிறந்து விளங்கும் மாணவிகளுக்கு ஊக்கத் தொகை, பேராசிரியர்களுக்கான பயிற்சிகள் என ஐ.வி.டி.பி. பல்வேறு விதமான உதவிகளை செய்து வருகிறது.

**இறுதியாக நடந்து முடிந்த பருவ தேர்வு முடிவில் அனைத்து பாடங்களிலும் முழுத் தேர்ச்சி அடைந்த 218 இரண்டாம் ஆண்டு மாணவிகளுக்கு தலா ரூ. 500 வீதம் ரூ. 1.09 இலட்சம் ரொக்கப்பரிசாக வழங்கப்பட்டது.**





பெண்களிடம் இருக்கும் நல்ல பண்பு அவர்களுக்கு பாராட்டை உண்டு பண்ணுகிறது. ஆனால் அவர்களின் நல்ல நடத்தையே அவர்களைத் தெய்வங்களாக்குகிறது.

மேலும் தொடர் மின்தடை காரணமாக கணினி ஆய்வகம் உபயோகப்படுத்தும் போதும் மற்றும் கல்லூரி விழாக்களின் போதும் மிகுந்த சிரமம் ஏற்படுவதால் ஜெனரேட்டர் உபகரணம் நன்கொடையாக வழங்குமாறு கல்லூரி முதல்வர் ஐ.வி.டி.பி. தலைவரை கேட்டுக் கொண்டதால் அவரது வேண்டுகோளை ஏற்று கல்லூரிக்கு 25KV ஜெனரேட்டர் **ரூ. 3.14 இலட்சம்** மதிப்பில் வழங்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து மாணவிகள் அனைவரும் ஐ.விடி.பி. தலைவரை அணுகி அழகுகலை பயிற்சி மற்றும் செல்போன் பழுதுபார்த்தல் பயிற்சி ஆகியவற்றை வழங்கினால் கல்லூரிக் கல்விக்கு பின்பு சுயதொழில் செய்ய ஏதுவாக இருக்கும் என கேட்டுக்கொண்டனர். அவர்கள் வேண்டுகோளை ஏற்று அழகுக்கலை மற்றும் செல்போன் பழுது பார்த்தல் பயிற்சிக்காக **ஐ.வி.டி.பி. நிறுவனம் ரூ. 1.30 லட்சம் வழங்கியது.**

**இதுவரை இந்த கல்லூரிக்கு ஐ.வி.டி.பி. மூலம் ₹ 36.4 இலட்சம் மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.**






25KV ஜெனரேட்டர் துவக்கி வைக்கும் ஐ.வி.டி.பி. தலைவர்



IVDP

வாழ்க்கை என்ற ஆற்றை, கடலை கடப்பதற்குப் பெண் என்ற படகோ கப்பலோ அவசியம் தேவை.

## பர்கூர் அரசு மகளிர் கலைக்கல்லூரிக்கு செல்போன் பழுதுபார்த்தல் சுயதொழில் பயிற்சிக்காக ₹ 33 ஆயிரம் ஐ.வி.டி.பி. உதவி



ஏலகிரி, டான்போஸ்கோ கல்லூரியில் பயிலும்

## ஏழை மாணவர்களின் மதிய உணவிற்காக ₹ 85,000 ஐ.வி.டி.பி. உதவி



ஏலகிரி, டான்போஸ்கோ கல்லூரியானது ஏழை மாணவர்களுக்காக செயல்படும் கல்லூரியாகும். அருட்தந்தையர்களின் நேரடி கள ஆய்வின் மூலம் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் மட்டுமே கல்வி பயில தேர்வு செய்யப்படுகின்றனர். அவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் சிறந்த கல்வியை இந்த கல்லூரி வழங்கி வருகிறது. அந்த மாணவர்கள் உணவு கொண்டு வராமல் கல்லூரிக்கு வருவதால் மதிய உணவு செலவில் 3ல் ஒரு பகுதியை கல்லூரி நிர்வாகமும், ஒரு பகுதியை மாணவர்களும், ஒரு பகுதியை ஐ.வி.டி.பி. நிறுவனமும வழங்குமாறு கல்லூரியின் முதல்வர் அருட்தந்தை. கிரகோரி ததேயுஷ் கேட்டுக் கொண்டதால் **ஐ.வி.டி.பி. நிறுவனம் மாணவர்களின் மதிய உணவிற்காக ரூ. 85 ஆயிரம் வழங்கியுள்ளது.**



சுறுசுறுப்புடன் எல்லாவற்றையும் செய்கிறவனுக்கு, எல்லாக் கதவுகளும் திறந்திருக்கும்.

# மாணவர்களின் இசைத்திறன் மேம்பட
## கோட்டையூர் ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளிக்கு பேண்ட் இசைக் கருவிகள்
## ₹ 1.10 இலட்சம் மதிப்பில் நன்கொடை



1990ஆம் ஆண்டில் ஐ.வி.டி.பி. நிறுவனத்தால் கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஒன்றியம் கோட்டையூரில் மலைவாழ், ஏழை மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டது ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி. துவக்கப்பள்ளியாக ஆரம்பிக்கப்பட்ட இந்த பள்ளி படிப்படியாக வளர்ந்து இன்று 10ஆம் வகுப்பு வரை செயல்படும் மெட்ரிக் பள்ளியாக உயர்ந்துள்ளது. தற்போது சென்னை மாதவரம் புனித அன்னாள் சபை அருட்சகோதரிகளால் சிறந்த முறையில் நடத்தப்படும் இப்பள்ளி குறைந்த கட்டணத்தில் சிறந்த கல்வியை வழங்கி வருகிறது.

பள்ளியில் நடைபெறும் விழாக்களின் போதும், சிறப்பு விருந்தினர்களை வரவேற்கும் விதமாகவும் அங்கு பயிலும் மாணவர்களுக்கு இசைக்குழு (பேண்ட்) பயிற்சி அளிக்க உதவுமாறு பள்ளியின் முதல்வர் அருட்சகோதரி. சின்னராணி அவர்கள் ஐ.வி.டி.பி. நிறுவனரை கேட்டுக்கொண்டதால் ஐ.வி.டி.பி. மூலம் **ரூ. 1 இலட்சத்து 10 ஆயிரம்** மதிப்பிலான **பேண்ட் இசைக் கருவிகள்** வழங்கப்பட்டன. மேலும் அந்த பள்ளியின் ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா கொண்டாட்டங்களின் போது வெற்றி பெற்ற மாணவர்களுக்கு **ரூ. 60 ஆயிரம் மதிப்பிலான பரிசுப்பொருள்களை ஐ.வி.டி.பி.நிறுவனம் வழங்கியது.**

**இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 1.70 இலட்சம் ஆகும்.**



கிறிஸ்துபாளையம் ஆனந்த நகர்

## ஜான்பிரிட்டோ பள்ளியில்

# ₹ 4.66 இலட்சம் மதிப்பில்

## திறந்தவெளி கலையரங்கம் அமைத்த ஐ.வி.டி.பி. நிறுவனம்

கிருஷ்ணகிரி மாவட்டம், கிறிஸ்துபாளையம் ஆனந்த நகரிலுள்ள புனித ஜான் பிரிட்டோ பள்ளிக்கு நிரந்தர அரங்கம் அமைக்க நன்கொடை வழங்குமாறு பள்ளி தலைமையாசிரியர் அருட்தந்தை. இருதயராஜ் அவர்கள் ஐ.வி.டி.பி. தலைவரை கேட்டுக்கொண்டார். பள்ளி மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு அவரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ஐ.வி.டி.பி. தலைவர் அரங்கம் அமைப்பதற்கு தேவையான மேற்கூரை இரும்புத்தகடுகள் அனைத்தையும் ஐ.வி.டி.பி. மூலம் வழங்குவதாக ஒப்புக்கொண்டார். **அதன்படி ரூ. 4.66 இலட்சம் மதிப்பில் மேற்கூரை இரும்புத் தகடுகள் ஐ.வி.டி.பி. நிறுவனம் மூலம் வழங்கப்பட்டது.**






பழமையைப் பற்றி ஒன்றுமே தெரியாமல்
புதுமையைச் சிறப்பாகப் படைக்க முடியாது.



## எலத்தகிரி புனித அந்தோணியார் பள்ளித் தரம் உயர ஐ.வி.டி.பி.-யின் உதவி

# ₹ 5.2 இலட்சம் மதிப்பிலான டெஸ்க் மற்றும் பெஞ்ச்

கிருஷ்ணகிரி மாவட்டம் எலத்தகிரியில் இயங்கிவரும் புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு அமர்ந்து படிக்க போதுமான அளவு இருக்கை வசதி இல்லாத நிலையில் 100 டெஸ்க் மற்றும் பெஞ்ச் வழங்கினால் உதவியாக இருக்கும் என இப்பள்ளி தலைமை ஆசிரியர் அருட்தந்தை. பெஞ்சமின் அவர்கள் ஐ.வி.டி.பி. தலைவரை அணுகி கேட்டுக்கொண்டார். **அதனையேற்ற ஐ.வி.டி.பி. நிறுவனம் அப்பள்ளிக்கு 100 டெஸ்க் மற்றும் பெஞ்ச் வழங்கியது. அதன் மதிப்பு ரூ. 5.2 இலட்சம் ஆகும்.**

### ஐ.வி.டி.பி. சங்கமே! நீ வாழி

எம்மதமும் சம்மதம் என்று சமத்துவத்தை உருவாக்கினாய் ஐ.வி.டி.பி.-யே நீ வாழி!
தண்ணீர் இல்லா தவித்த எங்களை தடுப்பணைகள் கட்டி தங்க வைத்தாய் ஐ.வி.டி.பி.-யே நீ வாழி!
என்னை நானே உயர்திக்க, உயர்வான சிறுசேமிப்பு தந்தாய் ஐ.வி.டி.பி.-யே நீ வாழி!
உறைவிடமாய் வீட்டு லோன், உழைத்து முன்னேற விவசாய கடன், வளமாய் வாழ வங்கிக்கடன், சிறு தொழில் செய்ய சிறப்புக்கடன்
தாழ்வைப் போக்கி தன்னைத்தானே உயர்த்திக்க தரணியில் தன்னம்பிக்கை வளர்த்த ஐ.வி.டி.பி.-யே நீ வாழி!
பாரதி, மகாத்மா இவர்களை நாங்கள் காணவில்லை.
ஆனால் நாங்கள் தங்களோடு வாழும் இக்காலம், எங்களுக்கு பொற்காலம்.
அபயம் என்ற குரலுக்கு அடைக்கலம் என்றோர் இடமுண்டு,
அதற்கு ஐ.வி.டி.பி. என்றோர் பெயருண்டு, அங்கே பிரான்சிஸ் என்ற பிரதர் உண்டு ஐ.வி.டி.பி.-யே நீ வாழி!

R. கௌரி, மகராஜகடை,
கிருஷ்ணகிரி 2-CLF1 கிளை

அன்னசத்திரமும், ஆலயமும் கட்டாவிட்டாலும் ஏழை மாணவர்கள் கல்வியில் சாதனை படைத்திட
பல நல்ல திட்டங்களை செயல்படுத்தும் ஐ.வி.டி.பி-யே நீ வாழ்க!



IVDP

தியாகம் தான் வாழ்க்கை,
இது இயற்கை கற்றுத் தந்த பாடம்.



# பெற்றோர்களை இழந்த 454 மாணவர்களுக்கு
# ₹ 25 இலட்சம் கல்வி உதவித் தொகை

கல்லூரி மாணவர்களுக்கு ஐ.வி.டி.பி. மூலம் பல கல்வி உதவித் தொகை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பெற்றோர் இருவரையும் இழந்த மாணவர்களுக்கு தலா ரூ. 10000-ம் பெற்றோரில் ஒருவரை இழந்த மாணவர்களுக்கு தலா ரூ. 5000-ம் என உதவித் தொகை வழங்கப்படுகிறது.

- வேலூர் அக்சீலியம் கல்லூரியில் பயிலும் 213 மாணவிகளுக்கு **ரூ. 11,70,000**
- திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் பயிலும் 137 மாணவர்களுக்கு **ரூ. 7,20,000**
- தர்மபுரி தொன்போஸ்கோ கல்வியியல் கல்லூரியில் 11 மாணவர்களுக்கு **ரூ. 1,10,000**
- தர்மபுரி தொன்போஸ்கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 93 மாணவர்களுக்கு **ரூ. 5,00,000** வழங்கப்பட்டது.





வெற்றி பெறுவது மிகவும் எளிதானதே, என்ன செய்கிறாய் என்பதை அறிந்து செய். செய்வதை விரும்பிச் செய், செய்வதை நம்பிக்கையோடு செய்.



இந்த உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சியில்
வேலூர் அக்சீலியம் கல்லூரி முதல்வர் மேரி ஜோஸ்பின்,
திருப்பத்தூர் தூய நெஞ்சக்கல்லூரியின் ரெக்டர் அருட்தந்தை. அந்தோணிராஜ்,
ஆகியோரும். தர்மபுரி தொன்போஸ்கோ கல்வியல்
கல்லூரியின் முதல்வர் அருட்தந்தை. மரிய லூயிஸ், தர்மபுரி தொன்போஸ்கோ கலை மற்றும் அறிவியல்
கல்லூரியின் முதல்வர் அருட்தந்தை. மரிய சூசை ஆகியோரும் உடனிருந்தனர்.

## இதுவரை பெற்றோரை இழந்த
## மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ்
# ஐ.வி.டி.பி. வழங்கிய கல்வி உதவித்தொகை
# ₹ 67 இலட்சம்





IVDP

ஒரு மனிதனின் உண்மையான தன்மையை அறிய
வேண்டுமானால், அவனுக்கு அதிகாரத்தை கொடுத்துப் பாருங்கள்.




## ஏற்காடு, கொம்புத்தூக்கியில் உள்ள
# மாண்ட்போர்ட் சமுதாய பள்ளிக்கு

## ₹ 5 இலட்சம் மதிப்பிலான CCTV CAMERA

### பொன்மொழிகள்...

உங்களால் இந்த அளவுதான் செய்ய முடியும் என்று எல்லை எதுவுமே கிடையாது. எல்லைகளெல்லாம் கற்பனையானவையே, தன்னால் முடியும் என்று எவன் மற்ற எல்லோரைக் காட்டிலும் அழுத்தமாக நினைக்கிறானோ அவன் ஜெயிப்பான்

• டேலி தாம்ஸன்

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் உள்ள கொம்புத்தூக்கியில் மாண்ட்போர்ட் சமுதாய பள்ளியானது இயங்கி வருகிறது. கொம்புத்தூக்கி பகுதியை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள மலைவாழ் மாணவர்கள் இங்கு கல்வி பயின்று வருகின்றனர். மாணவர்களுக்கான படிப்பு செலவு, விளையாட்டுச் செலவு, போக்குவரத்து வசதி, விடுதியில் தங்குவதற்கும், உணவுக்குமான செலவு அனைத்தும் இலவசமாகவே மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஏற்காடு மலையின் ஒரு பகுதியில் இந்த பள்ளி அமைந்துள்ளதால் மாணவர்களின் நலன் கருதி கண்காணிப்பு கேமரா வழங்குமாறு பள்ளியின் முதல்வர் அருட்சகோதரர். ஜார்ஜ் ஐ.வி.டிபி. நிறுவனரிடம் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஐ.வி.டி.பி. நிறுவனம் மூலம் **ரூ. 5 இலட்சம் மதிப்பிலான கண்காணிப்பு கேமரா** அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.



எந்த ஒரு பெரிய காரியத்தையும், ஆர்வமில்லாமல் ஒரு போதும் சாதிக்க முடியாது.



## கொளத்தூர் நிர்மலா மேல்நிலைப் பள்ளிக்கு

# ₹ 1 இலட்சம் மதிப்பிலான

# புத்தகங்கள், வண்ணத் தொலைக்காட்சி பெட்டி

சேலம் மாவட்டம், கொளத்தூரில் உள்ள நிர்மலா மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் அருட்சகோதரர்.டேவிட் செல்வராஜ் அவர்கள் மாணவர்களுக்கு நூல்களை வாசிக்கும் பழக்கத்தை தூண்ட வேண்டும் என்னும் நோக்கத்தோடு அந்த பள்ளியில் நூலகம் அமைத்துக் கொடுக்குமாறு ஐ.வி.டி.பி. தலைவரை கேட்டுக் கொண்டார்.

அவரின் வேண்டுகோளை ஏற்று ஐ.வி.டி.பி. நிறுவனம் மூலம் நூலகத்திற்கு தேவையான புத்தகங்கள் **ரூ. 60 ஆயிரம் மதிப்பிலும்**, வண்ணத் தொலைக்காட்சி பெட்டி **ரூ. 40 ஆயிரம் மதிப்பிலும்** வழங்கப்பட்டது.

**இதுவரை இந்தப் பள்ளிக்கு தேவையான டெஸ்க், பெஞ்ச், கணிணி ஆய்வகம், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை பாராட்டி பரிசுகள் என ரூ. 20.5 இலட்சம் மதிப்பிலான உதவிகளை ஐ.வி.டி.பி. நிறுவனம் வழங்கியுள்ளது.**

### மகிழ்ச்சி தானாக வரும்

உங்கள் மகிழ்ச்சி நீங்கள் என்ன பதவியில் இருக்கிறீர்கள் என்பதையோ, உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்பதையோ பொறுத்தது அல்ல, நீங்கள் என்ன சிந்தனை செய்கிறீர்கள் என்பதை மட்டுமே பொறுத்திருக்கிறது. கவலைகளும் பிரச்சினைகளும் வருவது வரட்டும். இப்போது இந்த நிமிடம், மகிழ்ச்சியுடன் செயலில் ஈடுபடுங்கள். ஏற்கனவே மகிழ்ச்சி அடைந்துவிட்டாற்போல் நடந்து கொள்ளுங்கள், மகிழ்ச்சி தானாக வரும்.

• டேல் கார்னெகி




## சேலம் மாவட்டம், அ.நா. மங்கலம் தூய மரியன்னை மேல்நிலைப் பள்ளியில்

# நூறு சதவீத தேர்ச்சி வழங்கிய ஆசிரியர்களைப் பாராட்டி

# ரூ. 2.75 இலட்சம் மதிப்பில்

# ஐ.வி.டி.பி. ஊக்கப்பரிசு

சேலம் மாவட்டம், அ.நா. மங்கலம் தூய மரியன்னை மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் படிப்பிலும், விளையாட்டிலும் மாநில அளவிலும், தேசிய அளவிலும் சிறந்து விளங்குகின்றனர். வருடந்தோறும் நடைபெறும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் இப்பள்ளி மாணவர்கள் தொடர்ந்து 100 சதவிகித தேர்ச்சி பெற்று வருகின்றனர்.

அந்த மாணவர்களை சிறப்புறச் செய்யும் ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் 58 பேருக்கு ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் மூலம் **தலா ரூ. 4000** மதிப்பிலான **டின்னர்செட்** பரிசாக வழங்கப்பட்டது. மேலும் கிருஸ்துமஸ் விழாவை முன்னிட்டு அங்கு பயிலும் 2500 மாணவர்களுக்கு கேக் வழங்கப்பட்டது.

பள்ளி தலைமையாசிரியர் அருட்சகோதரர். ஜான் டேவிட் தலைமையில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட ஐ.வி.டி.பி. நிறுவனத்தலைவர் குழந்தை பிரான்சிஸ் ஆசிரியர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார். இந்த பரிசுகளின் மொத்த மதிப்பு **ரூ. 2.75 இலட்சம்** ஆகும்.

இதுவரை இப்பள்ளிக்கு **கணிணி ஆய்வகம், ஜெனரேட்டர், குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரம், கூடைப்பந்து மைதானம்**, மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஊக்கப்படுத்தி பரிசுகள் போன்ற கல்வி பணிகளுக்காக ஐ.வி.டி.பி. நிறுவனம்

**ரூ. 28 இலட்சம்**

வழங்கியுள்ளது.

# வேலூர் அக்சீலியம் கல்லூரியின் மகளிர் தின விழா






20 சேலம் 12-2-2018 தினத்தந்தி

நாட்றாம்பாளையம் அரசு கால்நடை மருந்தகத்திற்கு

## ரூ. 30 லட்சம் மதிப்பிலான இடம்

### ஐ.வி.டி.பி. நிறுவன தலைவர் நன்கொடையாக வழங்கினார்

கிருஷ்ணகிரி, பிப்.12–
கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை தாலுகா அஞ்செட்டி அடுத்த நாட்றாம்பாளையம் கிராமத்தில் ஊர்புற நூலகத்தில் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. நிரந்தரமான இடம் இல்லாததால் கால்நடை மருந்தகம் கட்ட முடியாமல் இருந்தது. இந்நிலையில் நாட்றாம்பாளைம் கிராமத்தில் ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனத்திற்கு சொந்தமான இடத்தை நன்கொடையாக வழங்கிட வேண்டும் என நாட்றாம்பாளையம் கால்நடை மருந்தக உதவி மருத்துவர் டாக்டர். ஜெயச்சந்திரன், ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவன தலைவர் குழந்தைபிரான்சிசை கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து ரூ. 30 லட்சம் மதிப்பிலான இடத்தை கால்நடை மருந்தகம் கட்ட கொடுப்பதாக உறுதியளித்தார். அதன்படி இதற்கான பத்திரப்பதிவு தேன்கனிக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் நடந்தது. அதில் ஐ.வி.டி.பி.க்கு சொந்தமான இடத்தை தானமாக வழங்கும் வகையில் பத்திரப்பதிவு செய்யப்பட்டு, அதற்கான பத்திரத்தை ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவன தலைவர் குழந்தை பிரான்சிஸ், ஒசூர் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குனர் டாக்டர் சண்முகத்திடம் வழங்கினார்.

இதன் மூலம் நாட்றாம்பாளைம், தொட்டமஞ்சி ஊராட்சிகளுக்குட்பட்ட மோட்ராகி, சிவலிங்கபுரம், சேசுராஜபுரம், கேரட்டி, பத்திகவுண்டனூர், என்.புதூர் உள்ளிட்ட சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த 10 ஆயிரத்திற்கும் அதிகமான கால்நடைகள் பயன் பெறும் என கால்நடை உதவி மருத்தவர் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

## இறைவா!

**இன்று மட்டுமல்ல,**
**எம் வாழ்நாள்**
**முழுவதும்**
**நிலைக்கும்**
**சகோதரத்துவத்தை**
**சொற்களால் அல்ல,**
**செயல்களாலும்**
**வினைகளாலும்**
**எழுதப்பட்ட**
**சகோதரத்துவத்தை**
**எமக்கு**
**அருள்வாய்.**



பகை நமக்கு எதிரியல்ல,
பயம்தான் நமக்கு எதிரி.

# Fastrack Bag பரிசு



கிருஷ்ணகிரி, புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஐ.வி.டி.பி. நிறுவனம் மூலம்

₹ **45,000** மதிப்பில்

**Fastrack Bag பரிசு**



மதகொண்டப்பள்ளி, Our Lady's பள்ளி ஆசிரியர்களுக்கு

₹ **60,000** மதிப்பில்

**Fastrack Bag பரிசு**




கிருஷ்ணகிரி, புனித லூயிஸ் மருத்துவமனை பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கும்

₹ **1,00,000**

மதிப்பிலான

**Fastrack Bag பரிசு**



# ஆரணி புனித ஜோசப் இல்ல மாணவிகளுக்கு ஐ.வி.டி.பி.-யின் அன்பு பரிசு

**திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி புனித ஜோசப் இல்ல மாணவிகள் 160 பேருக்கு பாய், டம்ளர், வாட்டர் பாட்டில், கேக் ஆகியவற்றை ஐ.வி.டி.பி. தலைவர் வழங்கி மகிழ்ந்தார்.**

**இவை அனைத்தின் மொத்த மதிப்பு ரூ. 50,000 ஆகும்.**

## உடல் உழைப்பு ஈடு இணையற்றது

எப்போதும் பாடுபடு, எப்போதும் உழைத்துக் கொண்டிரு, உழைப்பிலே சுகம் இருக்கிறது. வறுமை, நோய் ஆகிய குட்டிப் பேய்களெல்லாம் உழைப்பைக் கண்டதும் ஓடிப்போய்விடும்.

மன உறுதி, மகிழ்ச்சி, உலகை நடத்தும் சக்தி, நமக்கு நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை, உடல் உழைப்பு ஆகியவற்றை ஒரு மனிதன் கண்டிப்பாக கைக் கொள்ளவேண்டும்.

• பாரதியார்



# மேகாலயாவில் உள்ள ஹோலிகிராஸ் பள்ளிக்கு

# ₹ 16 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்






இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மேகாலாயாவில் - மக்கன்ராவ் **(Mawkenraw)** என்ற இடத்தில் செயல்படும் ஹோலிகிராஸ் பள்ளியானது அங்குள்ள மலைவாழ் மக்களுக்கு அதிலும் குறிப்பாக காசி இன மக்களுக்கு சிறந்த கல்விச் சேவையை வழங்கி வருகிறது.

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள அவர்கள் குழந்தைகளின் கல்வியால் தங்கள் இனம் உயரும் என்ற நம்பிக்கையில் உள்ளனர். ஹோலிகிராஸ் பள்ளியும் இலாப நோக்கில்லாமல் சிறந்த கல்வியை வழங்குவதில் உறுதி கொண்டுள்ளது. **கடந்த வருடம் அப்பள்ளிக்கு 10 இலட்சம் மதிப்பிலான சீருடைகள் வழங்கப்பட்டன.** இவ்வாண்டு பள்ளி முதல்வர் அருட்தந்தை. அந்தோணி அவர்களின் வேண்டுகோளை ஏற்று பின்வரும் நலத்திட்டங்கள் இப்பள்ளிக்கும், அதில் பயிலும் குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.



கனவு காண்பவர்கள் அனைவரும் தோற்பதில்லை.
கனவு மட்டுமே கண்டு செயலில் இறங்காதவர்கள் தான் தோற்கிறார்கள்.







விடுதி மாணர்களுக்கு குளிர்காலத்தில் ஆடைகளை உலர்த்த Drying Machine **ரூ. 1.3 இலட்சமும்**

கணினி ஆய்வகம் மற்றும் UPS, Battery ஆகியவற்றிற்காக **ரூ. 8.7 இலட்சமும்**

மாணவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் அதிக குளிரை தாங்கும் வண்ணம் தலா ஒரு Blanket **ரூ. 3.8 இலட்சம் மதிப்பிலும்**

மாணவர்களுக்கு தேவையான Dictionary,Geometry Box, Pencil Pouch போன்றவை **ரூ. 1.6 இலட்சம் மதிப்பிலும்**

**40 Fastrack bag ரூ. 48 ஆயிரம் மதிப்பிலும்**

என இந்த வருடம் **ரூ. 16 இலட்சம்** மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**இதுவரை இப்பள்ளிக்கு ரூ. 26 இலட்சம் மதிப்பிலான பல்வேறு உதவிகள் ஐ.வி.டி.பி. மூலம் செய்யப்பட்டுள்ளன.**



அறிவு என்பது ஆழமான நதியைப் போன்றது. எவ்வளவு ஆழமாக இருக்கிறதோ, அவ்வளவு அமைதியாக இருக்கும்.



# ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் அகடமி அனுமந்தபுரம்

ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் அகடமி தர்மபுரி மாவட்டம், அனுமந்தபுரத்தில் செயல்பட்டு வருகிறது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பள்ளி, கல்லூரிக் கல்வி பயின்றவர்களின் தனித் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்தோடு துவங்கப்பட்டு தற்போது ஆங்கிலம் மற்றும் கணினிக் கல்வியை சிறந்த முறையில் இந்நிறுவனம் வழங்கி வருகிறது.

இவ்வாண்டு பயின்ற மாணவர்களின் கல்வித்திறனை அறியும் வண்ணம் ஆங்கிலம் மற்றும் கணினி திறன் கண்காட்சியானது நிறுவன வளாகத்தில் நடைபெற்றது.







பிடிக்கவில்லை என்றால் நண்பனுக்கு எதிரியாய் கூட இருந்துவிடு. ஆனால் துரோகியாய் ஒரு போதும் இருக்காதே.

IVDP







கண்காட்சியில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு ஐ.வி.டி.பி. தலைவர் **ரூ. 40 ஆயிரம்** மதிப்பிலான தங்க நாணயங்கள், வெள்ளி குங்குமச் சிமிழ் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார்.

இந்த வருடத்தில் மாணவர்களுக்கு புத்தகங்களுக்காக **ரூ. 38 ஆயிரமும்,** சீருடைகளுக்காக **ரூ. 40 ஆயிரமும்,** Fastrack Bag & Dictionary ஆகியவை **ரூ. 60 ஆயிரம்** மதிப்பிலும் வழங்கப்பட்டுள்ளது.

**இவ்வாண்டு பயிலும் மாணவர்களுக்காக ஐ.வி.டி.பி. நிறுவனம் ரூ. 2 இலட்சம் மதிப்பிலான பல்வேறு கல்வி உதவிகளை செய்துள்ளது.**



எதிர்பார்க்கும்போது நல்ல நண்பர்கள் கிடைப்பதில்லை.
நல்ல நண்பர்கள் எதையும் எதிர்பார்ப்பதில்லை.



# ஏற்காடு இளையோர் மன்ற ஆண்டு விழா

## பங்கேற்ற மாணவர்களுக்கு ஐ.வி.டி.பி. பரிசு

## ரூ. 78 ஆயிரம்

சலேசிய சபை அருட்தந்தையர்களால் சேலம் மாவட்டம், ஏற்காடு **Retreat Centre** நடத்தப்பட்டு வருகிறது. சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள ஏழை மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் இரவு நேர பள்ளிகள் மூலம் படிக்கும் திறனையும், விளையாட்டு திறனையும் கண்டறிந்து மேம்படுத்துவதுடன் சமூக பணிகளில் ஈடுபடும் ஆர்வத்தையும் தூண்டுகின்றனர்.

அந்த மாணவர்களையும், இளைஞர்களையும் பாராட்டி நடைபெற்ற இளையோர் மன்ற ஆண்டு விழா நிகழ்ச்சியில் ஐ.வி.டி.பி. மூலம் **ரூ. 78 ஆயிரம் மதிப்பிலான** பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டன. இந்த பரிசுகளை ஐ.வி.டி.பி.-யின் குட்டிக் குழந்தைகள் மாஸ்டர். ஹென்றிக் மற்றும் பேபி. மெர்லின் ஆகியோர் வழங்கினர்.





வாழ்க்கையில் தோல்வி மட்டும் தொடர்ந்து வந்தால்
தோற்றுக் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தமில்லை.
தோல்வியை தாண்டி சென்று கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம்.

# நகரை சுத்தப்படுத்தும் துப்புரவு பணியாளர்களை பாராட்டி **ரூ. 60 ஆயிரம்** மதிப்பில் பரிசு வழங்கி கௌரவப்படுத்திய ஐ.வி.டி.பி.




கிருஷ்ணகிரி–பெரியார் நகர், ஜக்கப்பன் நகர் போன்ற பகுதிகளில் துப்புரவு பணியை மேற்கொண்டுள்ள துப்புரவு பணியாளர்கள் குளிர்காலங்களில் சிரமப்படுவதை கண்ட ஐ.வி.டி.பி. தலைவர் அவர்கள் அனைவருக்கும் புத்தாண்டு அன்று ஸ்வெட்டர், போர்வை, புத்தாடை மற்றும் கேக் ஆகியவற்றை வழங்கி அவர்களை கௌரவித்தார்.

**துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கிய பரிசுகளின் மதிப்பு ரூ. 60 ஆயிரம் ஆகும்.**

## சாலையோரங்களில் வாழும் ஏழைகளுக்கு சென்னை களஞ்சியம் அமைப்பின் மூலம் ஐ.வி.டி.பி. போர்வை வழங்கி உதவி

**இதன் மதிப்பு ரூ. 27 ஆயிரம்**







## திரிபுராவில் செயல்படும் JUST நிறுவன சுயஉதவிக்குழுக்கள் வளர்ச்சிக்கு

# ரூ. 3.5 இலட்சம் உதவி

திரிபுரா மாநிலத்தில் இயங்கி வரும் JUST என்ற தொண்டு நிறுவனத்தின் கீழ் அங்குள்ள மலைவாழ் மக்களுக்காக சுய உதவிக்குழுக்கள் இயங்கி வருகின்றன. அந்த சுய உதவிக்குழுக்களை கண்காணிக்கவும், அவர்களுக்கு பயிற்சி வழங்கவும், தொழில் தொடங்கி ஊக்கப்படுத்தியும், **ஐ.வி.டி.பி. நிறுவனம் இவ்வாண்டு ரூ. 3.5 இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது.**

**இதுவரை JUST அமைப்பிற்கு ஐ.வி.டி.பி.**
**ரூ. 22.5 இலட்சம் மதிப்பில் பல்வேறு உதவிகள் அளித்துள்ளது.**

தொழுநோய் ஒழிப்பிற்காக மும்பையில் இயங்கி வரும் அலர்ட் இந்தியா அமைப்பிற்கு **ஐ.வி.டி.பி. ரூ. 3 இலட்சம்** நன்கொடை

**இதுவரை தொழுநோய் ஒழிப்பு** பணிகளுக்காக அலர்ட் இந்தியா அமைப்பிற்கு **ரூ. 22 இலட்சம்** நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



## அகில இந்திய அளவில் ஆணழகன் போட்டியில் வெற்றி பெற்ற ஐ.வி.டி.பி. உறுப்பினரின் மகனுக்கு பாராட்டும்

# ரூ. 25 ஆயிரம் ரொக்கப்பரிசும்

திருப்பத்தூர் கூட்டமைப்பில் ஐ.வி.டி.பி. செந்தூரப்பூ மகளிர் சுயஉதவிக் குழுவில் உறுப்பினராக உள்ள திருமதி. ராஜாத்தி என்பவரின் மகன் திரு. பிரதாப் என்பவர் மாநில அளவிலும், அகில இந்திய அளவிலும் நடைபெற்ற ஆணழகன் போட்டியில் கலந்து கொண்டு பல்வேறு பதக்கங்களை பெற்று இந்தியாவிற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.




ஐ.வி.டி.பி. உறுப்பினரின் குழந்தைகள் படிப்பில் மட்டுமல்லாது அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்குவதை ஊக்கப்படுத்தும் வண்ணம் திரு. பிரதாப் வெற்றி பெற்றதை பாராட்டி ஐ.வி.டி.பி. நிறுவனம் ரூ. 25 ஆயிரம் பரிசு வழங்கி பாராட்டியது.

## குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு விளம்பரங்களுக்காக

# ஐ.வி.டி.பி. ₹ 35,000 நன்கொடை

மாறிவரும் கலாச்சார சூழலில் குழந்தைகள் பல்வேறு வன்கொடுமைகளுக்கு ஆளாகின்றனர். குழந்தைகள் பாதுகாப்பிற்காக ஐ.வி.டி.பி. பல்வேறு வகையில் கடந்த இரு ஆண்டுகளாக உதவி வருகிறது. அதன் தொடர்ச்சியாக மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களில் உள்ள சுவற்றில் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு படங்களும் செய்திகளும் வரைவதற்காக ஐ.வி.டி.பி. ரூ. 35 ஆயிரம் நன்கொடை வழங்கியுள்ளது.






துடைக்க முடியாதவற்றை தூசியாவது தட்ட வேண்டும்.



# குழந்தைகள் இல்லங்களுக்கு இலவச LED தொலைக்காட்சி நன்கொடை

சமீப காலமாக கிருஷ்ணகிரி மாவட்ட குழந்தைகள் நலக்குழுமத்துடன் இணைந்து குழந்தைகள் இல்லங்களுக்கு ஐ.வி.டி.பி. மூலம் பல்வேறு நலப்பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

**இவ்வாண்டு**

| | |
|---|---|
| அடைக்கலாபுரம் புனித வின்சென்ட் மாணவர் இல்லம் | எலத்தகிரி ஜீவன் ஜோதி மாணவியர் இல்லம் |
| தர்மபுரி தொப்பூர் வள்ளலார் இல்லம் | கிருஷ்ணகிரி கமலா நேரு குழந்தைகள் இல்லம் |
| பஞ்சப்பள்ளி அரசு சிறார் இல்லம் | நாச்சிக்குப்பம் நம்பிக்கை மாணவர் இல்லம் |
| எலத்தகிரி புனித பிரான்சிஸ் மாணவியர் இல்லம் | புனித ஜோசப் மாணவியர் இல்லம், ஆரணி |

**குழந்தைகள் இல்லங்களுக்கு ரூ. 3.5 இலட்சம் மதிப்புள்ள 10 LED தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கப்பட்டது.**

கிருஷ்ணகிரி மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் இல்லங்கள் அனைத்திற்கும்

**இதுவரை ரூ. 40.5 இலட்சம் மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.**



உலகில் எளிது பிறர் முதுகில் பயணிப்பது.
உலகில் கடினம் தன் நெஞ்சில் அனைத்தையும் சுமப்பது.

IVDP



# ஐ.வி.டி.பி. மூலம் ரூ. 2.6 இலட்சம் மதிப்பில் கிறிஸ்துமஸ் பெருவிழா கொண்டாட்டங்கள்

கிறிஸ்துமஸ் ஒரு அன்பின் பகிர்வு விழா. இறைமகன் இயேசுவின் பிறந்த நாளை அன்புடனும், மகிழ்ச்சியுடனும் ஏழை எளியவர்களுக்கு இயன்ற உதவிகளை செய்தும் ஐ.வி.டி.பி. கொண்டாடி வருகிறது.

ஒவ்வொரு வருடமும் ஐ.வி.டி.பி. நிறுவனம் குழந்தைகள் இல்லங்கள், தொழுநோயாளிகள், HIV-யால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருடன் கிறிஸ்துமஸ் பெருவிழாவை கொண்டாடி வருகிறது.

இவ்வாண்டு பின்வரும் இல்லங்களில் வசிப்போருக்கு கேக், புத்தாடைகள் மற்றும் போர்வைகள் வழங்கி கிறிஸ்மஸ் விழா சிறப்பிக்கப்பட்டது.

## இவ்வாண்டு ஐ.வி.டி.பி. மூலம் கிறிஸ்துமஸ் பெருவிழா கொண்டாடப்பட்ட இடங்கள்.

- அத்திமுகம் மாணவர்கள் இல்லம்
- நம்பிக்கை இல்லம், நாச்சி குப்பம்
- ஜீவன் ஜோதி மாணவியர் இல்லம், எலத்தகிரி
- ஜீவன் ஜோதி மாணவர் இல்லம், கிருஷ்ணகிரி
- Our Lady's பள்ளி, மதகொண்டப்பள்ளி
- கிருஷ்ணகிரி மகளிர் சிறை
- கமலா நேரு குழந்தைகள் இல்லம், கிருஷ்ணகிரி
- புனித ஹென்றி முதியோர் இல்லம், சேலம்
- புனித ஜோசப் மாணவர் இல்லம், ஆரணி
- வள்ளலார் இல்லம், தொப்பூர்
- புனித பிரான்சிஸ் இல்லம், எலத்தகிரி
- புனித சூசையப்பர் இல்லம், கோட்டூர்
- தூய மரியன்னை மேல்நிலைப் பள்ளி, அ.நா. மங்கலம்



IVDP

வாழும் போதே மகிழ்ச்சியாக வாழ்ந்து விடுங்கள். ஏனெனில் மறுமுறை ஒத்திகை கிடைக்காது.

## கால்கள் செயல் இழந்த ஐ.வி.டி.பி. மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினரின் கணவருக்கு

# ரூ. 25 ஆயிரம் நிதியுதவி

ஐ.வி.டி.பி. சபரி மகளிர் சுயஉதவிக்குழு தொகரப்பள்ளி கூட்டமைப்பில் சாப்பமுட்லு என்ற இடத்தில் இயங்கி வருகிறது. இந்த குழுவில் உறுப்பினராக உள்ள திருமதி. மைதிலி என்பவரின் கணவர் திரு. பிரபாகரன் என்பவர் திடீரென்று உடல்நலக்குறைவு ஏற்பட்டு கை, கால்கள் செயல் இழந்த நிலைக்கு தள்ளப்பட்டார்.


கூலி வேலை செய்து குடும்பம் நடத்தி வந்த நிலையில் மருத்துவ செலவும், சேர்ந்து குடும்பம் நிலை குலைந்தது. **அதை அறிந்த ஐ.வி.டி.பி. தலைவர் ஐ.வி.டி.பி. நிறுவனம் மூலம் ரூ. 25 ஆயிரம் வழங்கினார்.**



**அதன் மூலம் திரு. பிரபாகரன் பெட்டிக்கடை வைத்து பிழைத்துக்கொள்வேன் என்று ஐ.வி.டி.பி. தலைவருக்கு நன்றியுடன் கூறினார்.**

# குடிசை தீ விபத்து நிதி உதவி

ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்கள் சிலர் இன்றும் தோட்டம், நிலம், வயல்வெளிகளில் குடிசைவீட்டில் வாழ்ந்து வருகின்றனர். மின்சாரக்கசிவு, கேஸ் அடுப்பு அல்லது விறகு அடுப்பு ஆகியவற்றின் மூலம் சில நேரங்களில் எதிர்பாராத தீ விபத்து ஏற்படுகிறது. பொருள்களை இழக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. அதுபோன்ற நேரங்களில் ஐ.வி.டி.பி. நிறுவனம் மூலம் நேரடியாக தீ விபத்து ஏற்பட்ட குடும்பங்களை சந்தித்து அவர்களுக்கு ரூ. 10,000ம் நிதிஉதவியும், துணிமணிகளும் வழங்கப்படுகின்றன. **இந்த ஆண்டு குடிசை தீ விபத்து நிதி உதவியாக 16 உறுப்பினர்கள் குடும்பங்களுக்கு ரூ. 1.8 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.**



**இதுவரை குடிசை தீ விபத்து நிதி உதவியாக மொத்தம் ரூ. 29 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.**

# முதியோர் நலனில் ஐ.வி.டி.பி.

## சென்னையில் உள்ள உயிர் ஒளி முதியோர் இல்லத்திற்கு ரூ. 4 இலட்சம் மதிப்பிலான சோலார் வாட்டர் ஹீட்டர், சோலார் விளக்குகள் மற்றும் வண்ணத் தொலைக்காட்சி பெட்டி ஐ.வி.டி.பி. நிறுவனம் நன்கொடை

சென்னையில் செயல்படும் உயிர் ஒளி என்ற தொண்டு நிறுவனத்தின் நோக்கம் கவனிக்க யாருமின்றி அனாதைகளாக தெருவில் இருக்கும் முதியோர்களுக்கு இலவசமாக உணவு உடை, இருப்பிடத்துடன் அவர்களை சிறந்த முறையில் பராமரிப்பதாகும்.

அங்கு ஆண்கள், பெண்கள் என 45க்கும் மேற்பட்ட முதியோர் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் சிலபேர் நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்து வருகின்றனர். அவர்களுக்கு தினமும் குளிப்பதற்கு வெந்நீர் வழங்க ஏதுவாக சூரிய ஒளியில் வெந்நீர் தயாரிக்கும் கருவி அமைத்து தருமாறு இல்ல நிர்வாகி திரு. ராஜ்குமார் அவர்கள் ஐ.வி.டி.பி. தலைவரை அணுகி கேட்டுக்கொண்டார். மேலும் சென்னையில் மின்தடை அதிகம் இருப்பதால் இல்லத்தில் இருப்பவர்கள் தடையின்றி நடமாடவும், உறங்கவும் ஏதுவாக சோலார் விளக்குகள், மின்விசிறிகள் மற்றும் வண்ணத்தொலைக்காட்சி பெட்டி ஆகியவற்றை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

**யாருமற்ற முதியோர்களுக்கு சேவை செய்து வரும் உயிர்ஒளி தொண்டு நிறுவனத்தை பாராட்டியும் அந்த முதியோர் நலனை கருத்தில் கொண்டு, அவர்கள் கோரிய அனைத்து உதவிகளும் ஐ.வி.டி.பி. நிறுவனம் மூலம் வழங்கப்பட்டது. இவற்றின் மதிப்பு**

**ரூ. 4 இலட்சம்**

**ஆகும்.**








# இல்ல குழந்தைகளுக்கு சோலார் வாட்டர் ஹீட்டர் உதவி

## மொத்த மதிப்பு ரூ. 2.64 இலட்சம்

**அடைக்கலாபுரம்**
**ஆனி மேரி இல்ல**
மாணவிகளுக்கு
**ரூ. 1.32 இலட்சம்**
மதிப்பிலான சூரிய ஒளி
வெந்நீர் தயாரிக்கும் கருவி




**வேலூர் மாவட்டம்**
**ஏலகிரி மலையில் உள்ள**
**புனித சார்லஸ் இல்ல**
மாணவ-மாணவிகளுக்கு
**ரூ. 1.32 இலட்சம்**
மதிப்பிலான சூரிய ஒளி
வெந்நீர் தயாரிக்கும் கருவி




**இதுவரை ஐ.வி.டி.பி. மூலம்**
**ரூ. 15.25 இலட்சம்** **மதிப்பில் சோலார் வாட்டர் ஹீட்டர் குழந்தைகள் இல்லங்களுக்கும் முதியோர் இல்லங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.**



# ரூ. 23,000 மதிப்பிலான வாட்டர் பாட்டில்கள் குழந்தைகள் இல்லங்களிலுள்ள குழந்தைகளுக்கு நன்கொடை

அடைக்கலாபுரம் புனித வின்செண்ட் இல்ல மாணவர்களுக்கும், ஆனிமேரி இல்ல மாணவிகளுக்கும் பள்ளிக்கு குடிநீர் எடுத்துச் செல்ல ஏதுவாக 165 வாட்டர் பாட்டில்கள் ஐ.வி.டி.பி. நிறுவனம் மூலம் வழங்கப்பட்டன. **இவற்றின் மதிப்பு ரூ. 23 ஆயிரம் ஆகும்.**

**இதுவரை இந்த இரு இல்லங்களுக்கும் குடிநீர் சுத்திகரிக்கும் கருவி, வண்ணத்தொலைக்காட்சி பெட்டிகள், வாட்டர் பாட்டில்கள், சோலார் வாட்டர் ஹீட்டர், குளிர்கால ஆடைகள் என இதுவரை ரூ. 5 இலட்சம் மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.**

## வெற்றி பற்றியே நினையுங்கள்

வெற்றியைப் பற்றி நினையுங்கள், தோல்வி பற்றி நினைக்காதீர்கள், அலுவலகத்தில் ஆகட்டும் வீட்டில் ஆகட்டும், தோல்வி மனப்பான்மையைத் துரத்திவிட்டு அந்த இடத்தில் வெற்றி மனப்பான்மையை நிலை நாட்டுங்கள். ஒரு துன்பம் வரும்போது "நான் இதை வெற்றி கொள்வேன்" என்று சொல்லிக் கொள்ளுங்கள். "நான் தோற்றுப் போவேன்" என்று சொல்லிக் கொள்ளாதீர்கள். "என்னால் முடியும்" என்று எண்ணுங்கள். "என்னால் முடியாது என்று எண்ணாதீர்கள்'' வெற்றி நோக்கு, வெற்றியைச் சம்பாதித்துத் தரக்கூடிய திட்டங்களை உருவாக்குவதற்கான பக்குவத்தை ஏற்படுத்தி கொடுக்கும்.

மிக இக்கட்டான சூழ்நிலைகளில் "நான் தோற்று விடுவேனோ" என்று சிந்திக்காதீர்கள். "நான் வெல்வேன்" என்றே நம்புங்கள். அப்போதுதான் பிரச்சனைகளை வெல்ல வழிபிறக்கும். வீட்டிலும், வேலையிலும், வெளியிலும் "நான் வெற்றி பெறுவேன்" என்கிற மனநிலையிலேயே எப்போதும் இருக்க வேண்டும்.

• டேவிட் ஜே. ஸ்வார்ட்ஸ்



கோபமும், புயலும் ஒன்றுதான் அடங்கிய பிறகு தான் தெரியும் அடைந்த நஷ்டம் எவ்வளவு என்று.



## ஐ.வி.டி.பி. நிறுவனத்திற்கு வருகை தந்த விருந்தினர்கள்

- **Bella Premier**
  போலந்து நிறுவனத்திலிருந்து
  **Mrs. Krystyna Joze fowicz and Ms. Alina Posluszny**
  ஆகியோர் ஐ.வி.டி.பி.-க்கு வருகை புரிந்தனர்.

## ஐ.வி.டி.பி. நிறுவனத்தில் பயிற்சி பெற வருகை புரிந்தோர்...



- பெங்களூர் – அசிம் பிரேம்ஜி பல்கலைக் கழக மாணவர்கள்



- சென்னை மரியாலயா நிறுவன பணியாளர்கள்



- தர்மபுரி – தொன்போஸ்கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி சமூக பணி மாணவர்கள்



- அக்சீலியம் கல்லூரி MBA மாணவியர்



விழுந்த இடத்தை மறந்து விடு.
ஆனால் தடுமாறிய இடத்தை மறந்து விடாதே.

# மகளிர் குரல்



என்னுடைய பெயர் கிருபாவதி வெங்கடாசலம், நான் கடந்த 10 வருடங்களாக கிருஷ்ணகிரி 1 CLF 3 கிளையைச் சேர்ந்த கீர்த்தனா மகளிர் மன்றம் என்ற குழுவில் உறுப்பினராக இருந்து வருகிறேன். நாங்கள் படிக்கும் காலத்தில் எனது அம்மா சங்கத்தில் சேர்ந்திருந்தார். அப்போது இருந்தே எங்களின் படிப்பு செலவிற்கும், எங்களின் திருமண செலவிற்கும் சங்கம் பேருதவியாக இருந்தது.

படித்து முடித்து நான் தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிகிறேன். எனது கணவர் சுயதொழில் செய்கிறார். வருடத்திற்கு சங்க கடன் மற்றும் வங்கிக்கடன் மூலமாக பெறும் கடன் எனது குழந்தையின் படிப்பிற்கும், கணவரின் தொழில் வளர்ச்சிக்கும் உதவியாக உள்ளது.

எங்கள் சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் தேவையறிந்து விட்டுக்கொடுத்து கடன் பெறுகிறோம். படித்து இருந்தாலும் ஆரம்ப காலத்தில் வெளியில் சென்று பழக்கமில்லாததால் தயங்குவோம். சங்கத்தில் சேர்ந்த பிறகு தைரியமாக வங்கிக்கு சென்று வருகிறோம். ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் மூலம் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு கிடைத்தது. எனது பள்ளியில் உள்ள மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் எங்களால் இயன்ற அளவு நல்லது கெட்டதை எடுத்துக் கூறும் தெளிவு பெற்றுள்ளோம்.

ஒரு வேளை ஐ.வி.டி.பி. மகளிர் சங்கத்தில் சேராதிருந்தால் எங்கள் குடும்பத்தில் இவ்வளவு பொருளாதார வளர்ச்சி பெற்றிருப்போமா என்று தெரியவில்லை. ஐ.வி.டி.பி.-க்கு எனது நன்றி.

திருமதி. கிருபாவதி வெங்கடாசலம்
கீர்த்தனா மகளிர் மன்றம், **K1-CLF3** கிளை



வணக்கம் என் பெயர் இந்திராணி – ரங்கன், எனது பெற்றோர் குடும்பம் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்ததால் என்னை எட்டாம் வகுப்பு மட்டுமே படிக்க வைத்தனர். என்னுடன் பிறந்தவர்கள் 3 பெண்கள், 3 ஆண்கள் எனக்கு படிக்க மிகவும் ஆசை. ஆனால் அந்த காலத்தில் பெண்களை அதிகம் படிக்க வைப்பதில்லை. குடும்ப சூழ்நிலையை காரணம் காட்டி என்னை வசதியான குடும்பத்தில் இரண்டாம் தாரமாக இளவயது திருமணம் செய்து வைத்தனர்.

13 வயதில் விருப்பம் இல்லாத திருமணத்தை செய்ததோடு இல்லாமல் என் தங்கையையும் என் கணவருக்கே மூன்றாம் தாரமாக திருமணம் செய்து வைத்தனர். பிரசவத்தில் என் தங்கையும் இறந்து விட்டாள். எனது கணவரின் மூன்று மனைவியின் (என்னுடன் சேர்த்து) குழந்தைகள் 3 பெண், 4 ஆண் குழந்தைகளை கவனிக்கும் பொறுப்பு எனக்கு, அவர்கள் அனைவரையும் எனது சொந்த குழந்தைகளாக பாவித்து வளர்த்தேன்.

அந்த சமயத்தில் எனக்கு ஆறுதலாக இருந்தது நான் சேர்ந்த ஐ.வி.டி.பி. துர்கா மகளிர் மன்றம், புலிக்கரை கிளை, அதன் தலைவியாக செயல்பட்டு வந்த எனக்கு எனது குழந்தைகளை நல்லமுறையில் வழிநடத்த ஐ.வி.டி.பி. உதவியாக இருந்தது. என் குழந்தைகளை விவசாயத்தின் மூலம் கிடைத்த வருவாயில் மேல்நிலைக் கல்வி வரை படிக்க வைத்தேன். ஆனால் கல்லூரிக்கு செல்வதற்கு ஐ.வி.டி.பி. மூலம் சங்க கடன், சிறப்பு கடன், வங்கிக்கடன் எடுத்து தான் படிக்க வைக்க முடிந்தது.

ஐ.வி.டி.பி. இல்லாவிட்டால் என்னைப் போலவே என்னுடைய குழந்தைகளையும் படிக்க வைக்க இயலாமல் போய் இருக்கும். இன்று என்னுடைய குழந்தைகள் அனைவரும் படித்து நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். எங்கள் குழுவில் உள்ள உறுப்பினர் குழந்தைகளும் சங்கத்தில் சேர்ந்ததால் தான் கடன் எடுத்து படிக்க வைக்க முடிகிறது.

திருமதி. இந்திராணி–ரங்கன்,
துர்கா மகளிர் மன்றம், பாலக்காடு

## ஏழை விதவையின் நன்றி மடல்

செவிக்கு ஒலியைத் தந்த ஒளிமயமானவரே!
செவிக்கு கேட்கும் திறனை தந்த கேடயமானவரே!
செவிக்கு உணவளித்த உத்தமரே, உயர்ந்தவரே!
வானத்தில் தோன்றும் மழையின் சலசலப்பு ஒலியைக் கேட்க வைத்த சரணலாயம் போன்றவரே!
கடல் அலைகளின் ஓசையை கேட்க வைத்த கர்த்தர் போன்றவரே!
காற்றில் கலந்து வரும் ஒலியைக் கேட்க வைத்த கருணை நிறைந்தவரே!
தன்னலம் காணாத பிறர் நலம் காணும் தந்தையே!
தரணிதனில் வாழும் ஏழைகளுக்கு உதவும் பிதாவே!
ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனத்தின் புகழ் உலகம் எங்கும் பரவட்டும்.
நன்றி! நன்றி!! நன்றி!!!



ஆ. உமாதேவி,
ஸ்ரீ மீனாட்சி மகளி மன்றம்,
ஊக்குநர், பிரதிநிதி மற்றும் உறுப்பினர்கள்
(காது கேட்கும் கருவி வாங்கி கொடுத்ததற்காக ஆ. உமாதேவி அவர்களின் நன்றி மடல்)



சிதைக்க முயலும் சோதனைகளுக்கு நடுவே,
நம்மை செதுக்கி உயரும் சாதனைதான் வாழ்க்கை.

## டிசம்பர் 2017ல் இருந்து மார்ச் 2018 வரையிலான ஐ.வி.டி.பி. குழுக்களின் விபரம்

ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள் : கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் வேலூர்.

| விவரம் | மார்ச் 2017 வரை | ஏப்ரல் 2017– மார்ச் 2018 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி.–யில் உள்ள மொத்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் | 11092 | 1042 | 12134 |
| மொத்த சுய உதவிக்குழு உறுப்பினர்கள் | 2,02,476 | 16672 | 219168 |
| ஐ.வி.டி.பி. குழுக்களின் மொத்த சேமிப்பு | ₹ 470 கோடி | ₹ 86 கோடி | ₹ 556 கோடி |
| ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற இலாபப்பங்கீடு | ₹ 394 கோடி | ₹ 56 கோடி | ₹ 450 கோடி |

## கடன் விவரம்

| விவரம் | மார்ச் 2017 வரை | ஏப்ரல் 2017– மார்ச் 2018 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை | ₹ 2519 கோடி | ₹ 379 கோடி | ₹ 2898 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் உள்கடனாக பெற்ற சங்க கடன் தொகை | ₹ 2473 கோடி | ₹ 290 கோடி | ₹ 2763 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ.வி.டி.பி. கடன் தொகை | ₹ 111.5 கோடி | ₹ 21.5 கோடி | ₹ 133 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத்திட்டங்களுக்காக செலவிட்ட தொகை | ₹ 137.4 கோடி | ₹ 15.8 கோடி | ₹ 153.2 கோடி |
| மொத்த கடன் சுழற்சி | ₹ 5240.9 கோடி | ₹ 706.3 கோடி | ₹ 5947.2 கோடி |

## மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி.

மனிதன் மனித நேயத்துடன் இருப்பதை விட மகத்தான காரியம் வேறு எதுவும் இல்லை

(ஐ.வி.டி.பி. நேரடியாகவும் குழுக்களின் பங்களிப்பாகவும் வழங்கிய தொகை)

| விவரம் | மார்ச் 2017 வரை | ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2018 வரை | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கை பாதுகாப்பு நிதி | ₹ 19.77 கோடி | ₹ 3.56 கோடி | ₹ 23.33 கோடி |
| கார்கில் போர், குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வெள்ள நிவாரணம் போன்ற பணிகளுக்காக ஐ.வி.டி.பி. குழுக்கள் வழங்கிய தொகை | ₹ 2.00 கோடி | | ₹ 2.00 கோடி |
| உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குடிசை தீ விபத்து நிதி, இதய அறுவை சிகிச்சை நிதி, ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம் | ₹ 34.8 இலட்சம் | ₹ 2.55 இலட்சம் | ₹ 37.35 இலட்சம் |
| மருத்துவமனை, சிறைகள், முதியோர் இல்லம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டது | ₹ 87.9 இலட்சம் | ₹ 43 இலட்சம் | ₹ 1.31 கோடி |
| கல்வி பணிகளுக்காக வழங்கிய தொகை | ₹ 19.7 கோடி | ₹ 2.72 கோடி | ₹ 22.42 கோடி |
| ஊக்குனர்களுக்கு மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கப்பரிசு, உதவித்தொகை, சீருடை வழங்கியது. | ₹ 3.2 கோடி | ₹ 37 இலட்சம் | ₹ 3.57 கோடி |
| **மொத்தம்** | **₹ 45.9 கோடி** | **₹ 7.1 கோடி** | **₹ 53 கோடி** |

# IVDP

INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT · I.V.D.P · TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி · SINCE 1979

## தன்னார்வ தொண்டு நிறுவனம்


ஐ.வி.டி.பி. இல்லம்,
9E, சாந்தி நகர் 3வது கிராஸ்,
கிருஷ்ணகிரி-635 001,
தமிழ் நாடு, இந்தியா

04343-232 129, 236 420

francis@ivdpkrishnagiri.org

www.ivdpkrishnagiri.org